விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 280 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை (24.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

### பொதுக் கொள்கையுடன் பணியாற்றத் தயார்


# தீர்மானங்களை எடுக்க தயங்கப் போவதில்லை

### பதவியேற்ற பின் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

அனைத்து நாடுகளுடனும் அனைவருடனும் ஒன்றிணைந்து பொதுக் கொள்கையுடன் பணியாற்றத் தயார் எனத் தெரிவித்துள்ள புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தீர்மானங்களை எடுக்கத் தயங்கப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படும்

### ஹந்துன்நெத்தி

(கொழும்பு)

பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் (NPP) அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற 02

## மீன் பிடிக்க சென்றவர்

### சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி கடற்கரையில் மீன் பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி ஒருவர் வள்ளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலி மத்தியைச் சேர்ந்த சிதம்பரம் 15

## தேசிய கீதம் இசைத்தபோது எழுந்து நின்ற பௌத்த பிக்குகள்

### அநுர ஆட்சியில் மாற்றத்துக்கான அத்திபாரம்




(கொழும்பு)

இலங்கையில் இதுவரை காலமும் தேசிய கீதம் பாடப்படும் போது நாற்காலியில் அமர்ந்திருக்கும் பௌத்த துறவிகள் நேற்றைய தினம் எழுந்து நின்றனர். 02

## இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார் அநுர குமார

(கொழும்பு)

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் பதவிப் 15



## வன்முறைகளுக்கு இடமளிக்காதீர்

### பாதுகாப்புப் பிரதானிகளிடம் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான இந்தப் பயணத்தில் வன்முறைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என புதிய ஜனாதிபதி அநுர 02



### முள்ளிவாய்க்காலில் நீர் நிரம்பிய

## பாத்திரத்துக்குள் வீழ்ந்து 11 மாத குழந்தை மரணம்

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் நீர் நிரம்பிய பாத்திரத்திற்குள் விழுந்த 11 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை தாயுடன், நீராடுவதற்காக வீட்டில் உள்ள குளியலறைக்குச் சென்றிருந்த போது, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

### விரைவில்

## 4 பேர் கொண்ட அமைச்சரவை

### ஹரிணி

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நான்கு பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கவுள்ளதாகவும் அது விரைவில் 15

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் இராஜினாமா



(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தமது ஆளுநர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் என வட மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

### யாழ்.மணியந்தோட்டத்தில்

## தனியார் பேருந்தை மறித்து சாரதி மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மணியந்தோட்டத்தில் தனியார் பேருந்தை வழிமறித்த, முகமூடி அணிந்து வந்த ஒரு குழுவினர் பேருந்து சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த ஒரு குழுவினரே வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியகீதம்...

2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று நேற்றையதினம் இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவி யேற்றார்.

இந்நிலையில் இதுவரைகாலமும் எழுந்திருக்காத பிக்குகள் நேற்று தேசிய கீதம் பாடப்படும்போது எழுந்து நின்றனர்.

இந்த சம்பவமானது அநுரவின் ஆட்சியின் இலங்கையில் மாற்றத்திற்கான அத்திபாரமாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (ம-7)

## வன்முறை...

குமார திஸாநாயக்க பாதுகாப்பு படைகளின் பிரதானிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாதுகாப்புத் தரப்பினரை சந்தித்து பேசியுள்ளார்.

இதன்படி, முப்படைத் தளபதிகள், பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது தேர்தல் காலத்தில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

மேலும், புதிய அரசியல் கலாசாரத்தை உரு வாக்குவதற்காக இந்தப் பயணத்தில் வன்முறைச் செயல்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## விரைவில்...

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிதத்துள்ளதாவது, இந்த ஜனாதிபதி பதவிக்கு பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை இந்த நாட்டு மக்கள் காணமாட்டார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ம்முறையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவரே தற்போது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நோக்கத்திற்காக பொதுமக்கள் தங்களின் ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும், பிரஜைகளின் அங்கீகாரத்துடனும் உதவியுடனும் இந்த தேசத்தை கட்டியெழுப்புவோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். (ம-7)

# அநுரவின் நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு

## வாழ்த்துச் செய்தியில் சுமந்திரன்

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்காவின் நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி சிறந்த முன்னேற்றகரமான நகர்வாகும். நாம் எந்த வேட்பாளரை ஆதரிப்பதென ஆராய்ந்தபோது சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாத பல விடயங்கள் அநுரகுமார திஸாநாயக்கவின் விஞ்ஞாபனத்தில் இருந்தன.

அதேபோன்று அவர் அரசியலமைப்பில் உள்ளவாறு மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துவதாகவும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்துக் கலந்துரையாடலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அதுமாத்திரமன்றி 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்து முடிவுறுத்துவதாகவும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகவும் அவர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

எனவே அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் முன்னெடுக்கக்கூடிய இவ்வனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-7)

### சட்டமா அதிபரிடம்

# பாராளுமன்றை கலைப்பது தொடர்பில் அநுர கலந்துரையாடல்

பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் சட்டமா அதிபரிடமும் பிற சட்டத்துறை வல்லுனர்களிடமும் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதாயின் பொதுத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், அதற்காக பாராளுமன்றத்தை ஒரு தடவை கூட்ட வேண்டும் என்றும் சில தரப்புகள் தெரிவித்தனவாயினும், அது சட்டப்படி தேவையற்ற விடயம் என இப்போது ஜனாதிபதிக்கு உரிய தரப்புகள் சட்ட ஆலோசனை வழங்கியிருக்கின்றன எனத் தெரிகின்றது.

அரசமைப்பின் 150 ஆவது பிரிவின் கீழ் இத்தகைய சட்ட ஒதுக்கீட்டை நேரடியாக வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பது அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இந்தக் கட்டத்தில் தற்போதைய பாராளுமன்றத்தை அவர் கூட்டுவது, பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லாத நிலையில் அவர் நிறுவக்கூடிய அரசைத் தோற்கடிக்கச் செய்யும் வாய்ப்பைத் தரும் என்பதால் தற்போதைய பாராளுமன்றத்தைக் கூட்டாமலேயே முற்கூட்டியே அதைக் கலைத்து விடும் ஆலோசனை ஜனாதிபதிக்கு சட்ட வட்டாரங்களினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. (ம-7)

45 ஆம் நாள் நினைவுடனே...



தாயின் மடியில்
07.12.1997
அமரர்
ஆண்டவன் அடியில்
11.08.2024

ஜெயகாந்தன் சிவதர்சன்
(முகேஸ் அண்ணா உணவகம்)



காமாட்சித் தாயாம் மலரின் மடியினிலே
எமக்குத் தலைமகனாய் வந்துதித்த மாசற்ற மணி விளக்கே
ஐயா தர்சா! எமை ஆறாத் துயரத்தில் தவிக்க விட்டு
அவசரமாய் எங்கே சென்றாயடா!

நல்லைக்கந்தன் கொடியன்று நீ
விரதமிருந்து மூன்றாம் நாளே - உனை
சங்குப்பிட்டிப் பாலம் தன்னில்
காலன் கவர்ந்தானோ?

கனியிருக்க காய் கவர்ந்த கவலையிலே
உனைப் பிரிந்து மீளாத் துயரின்
சிறகிழந்த பறவையாய் தவிக்கின்றோமடா
எமைத் தவிக்கவிட்டு எங்கேயடா சென்றாய்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - நீ
மீண்டும் எம்மிடம் வருவாய் என்று வழிமேல்
விழி வைத்து எம் உயிருள்ளவரை
எம் செல்ல மகன் வருவான் என்று பார்த்திருப்போமடா
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அன்புள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக்கிரியைவரை பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (24.09.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

32/2, குமாரசாமி வீதி, (யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக)
யாழ்ப்பாணம். 077 606 2350
(358)

நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
(1996)

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

பதவி வெற்றிடம்


- அலுவலகச் செய்தியாளர்கள்
(இருபாலாரும் - உயர்தரம் கற்றிருத்தல்)
- முகாமைத்துவ உதவியாளர்கள்
(இருபாலாரும் - உயர்தரம் கற்றிருத்தல்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(இருபாலாரும் - சாதாரண தரம் கற்றிருத்தல்)


பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நாட்டின் ஜனாதிபதியாக அநுர பதவியேற்றபோது பதிவானவை

## ஜனாதிபதி அநுரவுக்கு ஆதரவளிக்க தயார்!

### சஜித் பிரேமதாஸ உறுதி



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுர குமாரதிசாநாயக்கவுக்கு தேவைப்படும் போது ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் இரவு தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் உத்தியோகபூர்வ இறுதி முடிவை அறிவிக்கும் விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அநுரகுமார திஸாநாயக்கவை நான் வாழ்த்துகிறேன்.

நாட்டைப்பலப்படுத்தவும் நெருக்கடியிலிருந்து மீட்பதற்கும் அவருக்கு பலம் இருப்பதாக நான் நம்புகிறேன். "தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை முன்னேற்றுவதற்கு ஆதரவை வழங்குவது அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் கடமையாகும் எனவும் தெரிவித்தார். (நி)

## இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய பிரதமர் வாழ்த்து





(சென்னை)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் உங்களின் வெற்றிக்கு எனது பாராட்டுக்கள், இந்தியாவின் அயல்நாடுகளிற்கு முன்னுரிமை என்ற கொள்கையில் இந்தியா இலங்கைக்கு முதலிடத்தை அளித்துள்ளது என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எங்கள் மக்களினதும் பிராந்தியத்தினதும் நன்மைக்காக எங்களின் பல்தரப்பட்ட ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக உங்களுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (நி)

## ஜனாதிபதி அநுரகுமாரவிற்கு சீன ஜனாதிபதி வாழ்த்து



(கொழும்பு)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவிற்கு சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் இரு நாடுகளின் நீண்டகால உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் சீனா-இலங்கை உறவுகளின் வளர்ச்சிக்கு நான் அதிக முக்கியத்துவம் அளித்து நமது பாரம்பரிய நட்புறவை கூட்டாக முன்னெடுத்துச் செல்வதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவிருக்கிறேன் எனவும் தெரிவித்தார். (நி)

## எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை

### மைத்திரி அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஓய்வு பெறப் போவதில்லை எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு பல பெரிய சவால்கள் உள்ளதாகவும் மைத்திரி சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் மூன்று தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதற்காக சுமார் நான்காயிரம் கோடி ரூபாய் செலவிட வேண்டும்.

அதற்கேற்ப மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்தை வீழ்த்திய இலங்கை



நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியானது 63 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து கிரிக்கெட் அணியானது ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கையுடன் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

செப்ரெம்பர் 18 ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டி யில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இன்னிங்ஸில் 305 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 340 ஓட்டங்களைப் பெற்றது. இதனால், 35 ஓட்ட பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 309 ஓட்டங்களைப் பெற்றது.

அதன்படி வெற்றி இலக்காக நியூஸிலாந்துக்கு 275 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட அதனை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியால் இரண்டாவது இன்னிங்ஸில் 211 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது.

இலங்கை சார்பில் பந்து வீச்சில் பிரபாத் ஜயசூரிய 5 விக் கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.இரண்டாவது போட்டி காலியில் நாளை மறு தினம்ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## கொரிய ஓபன் டென்னிஸ் சம்பியனான பீட்ரிஸ் ஹடாத் மியா



கொரிய ஓபன் டென்னிஸ் தொட ரில் பிரேசில் வீராங்கனை பீட்ரிஸ் ஹடாத் மியா சம்பியன் பட்டம் வென்றார்.

சியோல் நகரில் நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் டாரியா கசட்கினாவை எதிர்கொண் டார். முதல் செட்டை கசட்கினா 6இற்கு ஒன்று என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் சுதாரித்துக் கொண்ட பீட்ரிஸ் அடுத்த இரண்டு செட்களை 6இற்கு 4, 6இற்கு ஒன்று என்ற கணக்கில் தன்வசமாக்கி வெற்றி பெற்றார்.

இதன்மூலம் முதல்நிலை வீராங் கனையான டாரியா கசட்கினாவை வீழ்த்தி பீட்ரிஸ் ஹடாத் மியா சம்பியன் பட்டத்தை வென்றார். இது பீட்ரிஸ் ஹடாத் மியா பெறும் 4 ஆவது சர்வதேச சம்பியன் பட்ட மாகும். முன்னதாக அரையிறுதி யிலும் பீட்ரிஸ், ரஷ்யா வீராங்கனை வெரோனிகாவை வீழ்த்தி வெற்றி பெற்றார். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3229

**சரணியா**

பெரிய பெரிய ஹோட்டல் சென்றாலும் நாமளும் வெயிட்டரா மாறிடுறோம்



வெயிட்டருக்காக வெயிட் பண்ணி பண்ணி...

**மதுசாலினி**

சார் பரீட்சை மார்க்ல முட்டை போடாதீங்க, ஏண்டா...?



புரட்டாசி மாதம் வீட்ல சைவம் சார்


**அமல்ராஜ்**

வாழ்கையில அடுத்தவன் நம்மள என்ன நினைப்பானு யோசிக்காம இருந்தாலே...



நம்ம வாழ்கை எப்போவுமே சந்தோஷமா தான் இருக்கும்..

**திவ்யா**



வாய்ப்பு என்பது வடை மாதிரி .. நாம தான் காக்கா போல தேடிப் போய் தூக்கனும் ...

பீட்சா மாதிரி வீடு தேடி வரும்ன்னு காத்திருக்க கூடாது ...



**அருண்**




**சாராங்கா**

வாழ்க்கைத் தத்துவம்

டீல சக்கரை போட்டாலும் சக்கரைல டீய போட்டாலும் கரையபோரது என்னமோ சக்கரை தான்..



அதே மாதிரி வாழ்க்கைய நினைச்சு வருத்தப்பட்டாலும் வருத்தப்பட்டுகிட்டே வாழ்ந்தாலும் வீணாபோரது நம்ம வாழ்க்கை தான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர மீதான நம்பிக்கை ஒரு இரவில் தோன்றியதல்ல

## சபாநாயகர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியுடனான புதிய பயணத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தனது உத்தியோகபூர்வ முகநூல் கணக்கில் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில்,

இலங்கையின் பிரஜைகளை எதிர்கால உலகிற்கு இட்டுச் செல்லும் புதிய விமானியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டின் 9 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றமை நாடு முழுவதும் உள்ள மக்கள் அமைதியான முறையில் தமது வாக்குகளைப் பயன்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட மாற்றமாகும் என்பது எனது அவதானிப்பு.

எந்தவொரு தீவிரமான தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளும் இன்றி இவ்வாறானதொரு முடிவைப் பெற்றமைக்கான கௌரவம் நிச்சயமாக வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாக அனுபவிக்கத் தீர்மானித்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அதே போல் தேர்தல் ஆணையம், ஆயுதப்படைகள், பாதுகாப்புத் துறையின் உண்மையான வெற்றியாகும்.

அநுரகுமார திஸாநாயக்க மீதான இந்த மக்கள் நம்பிக்கை ஒரே இரவில் தோன்றியதல்ல அது பாராளுமன்ற ஜனநாயகத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டதன் விளைவு என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அவர் முன்னால் இப்போது எளிதான சவால் எதுவும் இல்லை. நமது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பின் மாறுபாட்டை உணர்ந்துகொண்டு, உலகளாவிய புவிசார் அரசியல் போக்குகளுடன் மோதாமல் இந்த நீண்ட பயணத்தை அவர் நிலையானதாக மேற்கொள்ள வேண்டும்.



அதற்கு அவருக்கு போதுமான அரசியல் விருப்பம் இருப்பதாக நான் நம்புகிறேன்.

புதிய நிறைவேற்று ஜனாதிபதியுடனான புதிய பயணத்திற்கு இலங்கை வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# மாலைதீவுடன் கைகோர்க்க அநுரகுமாரவுக்கு அழைப்பு

(கொழும்பு)



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி தொடர்பில் தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில், "இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள் இன்று உங்கள் குறிப்பிடத்தக்க தேர்தல் வெற்றியில், மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க நட்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் நெருங்கிய அண்டை நாடுகளாக இருக்கின்றோம்.

உங்கள் புதிய பாத்திரத்தில் நீங்கள் மகத்தான வெற்றி பெற வாழ்த்துக்கள்" என தெரிவித்துள்ளார். (நி)

# 'சதொச' தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அவர் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

புதிய ஜனாதிபதிக்கு சதொச நிறுவனத்தின் தலைவரை நியமிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கையரின் வலிக்கு தேர்தல் முடிவு ஒரு சாட்சி

## எரிக் சொல்ஹெய்ம்

(பெர்லின்)

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது தாழ்த்தப்பட்ட இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு தேர்தல் முடிவு ஒரு சாட்சி என ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை மக்கள் பாரம்பரிய உயரடுக்கிற்கு வெளியே இருந்து ஒரு கட்சியையும் வேட்பாளரையும் தெரிவு செய்வது இதுவே முதல் தடவையாகும். திஸாநாயக்க அல்லது ஏ.கே.டி என அன்புடன் அழைக்கப்படும் அநுராதபுரம் மாவட்டத்தில் மிகவும் தாழ்மையான வளர்ப்பில் இருந்து வந்தவர். அவரது கட்சியோ அல்லது கூட்டணியோ கடந்த காலத்தில் ஆட்சிக்கு அருகில் இருந்ததில்லை.

பொருளாதார நெருக்கடியின் போது தாழ்த்தப்பட்ட இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு இந்த முடிவு ஒரு சாட்சி என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஜனாதிபதியின் செயலாளராக நந்திக சனத் குமாநாயக்க

(கொழும்பு)



ஜனாதிபதியின் செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

24.09.2024
புரட்டாதி 08, செவ்வாய்க்கிழமை
சப்தமி முன்னிரவு 6.47 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 4.14 மணிவரை
சுபநேரம் 10.32 -12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

சந்திராஷ்டமம்
சுவாதி

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** இல்லத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், வருமானம் பெருகி வளம் காணும் நாள்.

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும் நாள்.

**மகரம்** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மறைமுகப் போட்டிகள் மறையும், உதிரி வருமானங்கள் வந்த சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்** எந்தவொரு வேலையையும் நாளையென தாமதிக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள், முன்னேற்ற பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் செலவு செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.

**கன்னி** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வியாபாரம் தொழில் சம்பந்தமாக இழுபறியாக இருந்த இடையூறுகள் விலகும் நாள்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவார்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்களும் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

எந்தக் கேள்விக்கும் அன்பு சார்ந்த விடையிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய ஐக்கியத்தை தொடர்ந்து பலப்படுத்துவோம்

## தமிழ் மக்கள் பொதுச்சபை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பொதுச் சபையாகிய நாம் தேசத்தைக் கட்டி எழுப்பும் உன்னதமான ஒரு வழியில் முதலாவது படியைக் கடந்திருக்கின்றோம். தமிழ்ப் பொதுவேட்பாளரால் ஒன்று திரட்டப்பட்ட கூட்டு ணர்வையும் நம்பிக்கையை யும் தமிழ்த்தேசிய ஐக்கியத் தையும் தொடர்ந்து பலப் படுத்துவோம்; பாதுகாப்போம் எனத் தமிழ் மக்கள் பொதுச் சபை தெரிவித்துள்ளது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து வெளியிடப்பட்ட அறிக் கையில் இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எமது வாழ்த்துக்கள்.

தமிழ் மக்களின் இறைமை யையும் சுய நிர்ணய உரிமை யையும் அங்கீகரித்தால்தான் இலங்கைத் தீவின் பல்லினச் சூழலைப் பாதுகாக்கலாம் என் பதனை புதிய ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின் றோம்.

அத்துடன் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற கோஷத்தோடு கள மிறக்கப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். அவர் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை உணர்வு பூர்வமாக இணைக்கும் ஒரு குறியீடாக எழுச்சி பெற்றுள்ளார். வடக்கில் அவருக்குக் கிடைத்த வாக்குகள் தாயக ஒருமைப் பாட்டை பலப்படுத்த விரும் புபவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவை. தமிழ்ப் பொது வேட்பாளர் வடக்கையும் கிழக்கையும் இணைப்பது மட்டுமல்ல; தமிழர் தாயகத்தில் உள்ள மக்கள் அனைவரை யும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப் போடு களம் இறக்கப்பட்டார்.

அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறார். கடந்த 15 ஆண்டுகளிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஏதோ ஓர் ஒருங் கிணைவு ஏற்பட்டிருக்கிறது. தாயகத்தில் தமது உறவுகளின் ஊடாக பொது வேட்பாளரை பலப்படுத்துவதில் அவர்கள் அதிகம் பங்களித்துள்ளார்கள். தேர்தல் பிரசார நடவ டிக்கைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் பல வழிகளிலும் உதவி புரிந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தங்களை தாங்களே பலப்படுத்தும் ஒரு தேர்தல் களம் என்ற அடிப் படையில் பிரசார நடவடிக்கை களில் ஒருவித தன்னதிகாரம் அனுமதிக்கப்பட்டது.

தன்னியல்பான, தன் னெழுச்சியான செயற்பாடுகள் தடுக்கப்படவில்லை அதனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருந்தும் தாயகத் திலும் தமிழ் மக்கள் அவரவர் கொள்ளளவுக்கு ஏற்பவும்; அவரவர் சக்திக்கு ஏற்பவும்; அவரவர் அரசியல் புரிதல்க ளுக்கு ஏற்பவும் பிரசார நடவடிக்கைகளில் பங்களித் திருக்கிறார்கள்.

ஒரு மையத்திலிருந்து கட்டுப்படுத்தப்படாத இப்போக்கு காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய சில குழப்பமான தோற் றப்பாடுகளை தமிழ் மக்கள் பொதுச்சபை விளங்கிக் கொள் கின்றது. எனினும் மக்கள் தன் னார்வமாக பிரசார நடவடிக் கைகளை முன்னெடுத்தமை நமக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்தது. ஒரு மக்கள் அமைப்பும் கட்சிகளும் இணைந்து தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்தியமை என்பது தமிழ் அரசியலில் ஒரு புதிய போக்கு. ஒரு புதிய பண்பாடு. இந்தப் பண்பாட்டை தொடர்ந்தும் பலப்படுத்தி வளர்ப் பதற்கு தேர்தல் முடிவுகளுக்கும் அப்பால் அர்ப்பணிப்பும் தெளி வான தூர இலக்கும் இருக்க வேண்டும் என்று நம்புகின் றோம்.

தேசத்தை கட்டியெழுப்பும் பணிகள் தேர்தல் வெற்றிகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதனை தமிழ்மக்கள் பொதுச்சபை நன்கு விளங்கி வைத்திருக்கின்றது. தேர்தல் நடவடிக்கைகள் தேசத்தை கட்டி எழுப்பும் நடவடிக்கைகளில் ஒரு பகுதி மட்டுமே. அதற்குமப் பால் தேசத்தைக் கட்டியெழுப் புவது என்பது அதை விட ஆழமான பொருளில் பரந்த கன்ற தளத்தில் நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்கப் பட வேண்டிய ஒரு தொடர்ச் சியான அரசியல் முன்னெடுப்பு என்பதனை நாம் நன்கு விளங்கி வைத்திருக்கின் றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு கிடைத்த ஆதரவு அந்தப்பணி தொடர்ந்து முன்னோக்கிச் செலுத்தும் ஊக்க சக்தியாக அமையும் என்று நம்புகின்றோம். இந்த விடயத்தில் தேர்தல் நடவடிக் கைகளில் நமக்கு உதவி புரிந்த நமது மக்கள் அமைப்பின் உறுப்புக்களாக உள்ள அமைப்புகளுக்கும் தனி நபர்க ளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் றோம்

எமது கட்டமைப்புக்கு வெளியிலிருந்து எமக்குத் தன் னார்வமாக உதவி புரிந்த தனி நபர்களுக்கும் நிறுவனங்க ளுக்கும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப் புக்குள் அங்கம் வகிக்காத போதிலும் கட்சி கடந்து பரப்பு ரைகளில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்க ளுக்கும் உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், புலம் பெயர்ந்த பரப்பில் இருந்து நேரடியாகவும், மறைமுகமா கவும் தமக்கு பல்வேறு வழி வகைகளிலும் உதவி புரிந்த, உற்சாகமூட்டிய அனைத்துத் தரப்புகளுக்கும் நன்றிகள் என அவ் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி)

## மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல் லூரி தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவானது எதிர் வரும் 27 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் மானிப்பாய் இந் துக் கல்லூரியின் பிரதான மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூ ரியின் அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிவக் கொழுந்து ஸ்ரீ சற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரி வுரையாளரும் பழைய மாண வருமான பேராசிரியர் கலாநிதி க.ஸ்ரீகணேசன், வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் திரு மதி லாவண்யா சுகந்தன் மற் றும் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.இளங்கோ ஆகியோருடன் கௌரவ விருந் தினர்களாக வலம்புரிப் பத்திரி கையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பழைய மாணவர் "ஆசுகவி" செ.சிவ சுப்பிரமணியம் மற்றும் இளைப் பாறிய சங்கீத ஆசிரியர் செல்வி.சந்திரிக்கா கனேஸ் வரன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர். (நி)

## 37 இந்திய மீனவர்கள் பரு.துறை கடற்பரப்பில் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித் துறை கடற்பரப்பிற்கு அப்பால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீன வர்கள் 37 பேர் நேற்று முன் தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 3 மீன்பிடிப் பட குகளும் கைப்பற்றப்பட்டுள்ள தாக கடற்படையினர் தெரிவித் துள்ளனர்.

கடற்படையினரின் வழமை யான ரோந்து நடவடிக்கையின் போது குறித்த கைது இடம் பெற்றுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள படகுக ளுடன் கைதான மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத் திற்குக் கொண்டு செல்லப்பட்ட துடன் மயிலிட்டி நீரியல் வழத் திணைக்களத்தினரிடம் மேல திக நடவடிக்கைளுக்காக ஒப்ப டைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்த வருடத் தின் இதுவரையான காலப்ப குதி வரை 396 இந்திய மீன வர்கள் கைது செய்யப்பட்டுள்ள துடன் 53 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (6)

## சுகாதார சீர்கேடு; உணவகத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழில் சுகாதார சீர்கேட்டு டன் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையம் ஒன் றிற்கு சீல் வைக்கப்பட்டுள்ள துடன் 15 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 40 ஆயி ரம் ரூபாய் தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங் களில் சுகாதார பரிசோதகர்க ளால் திடீர் பரிசோதனை நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டது. அதன்போது உரிய முறை யில் குளிர்சாதன பெட்டியை பேணத்தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத் துவ சான்றிதழ் கொண்டி ராமை, சுகாதார முறைப்படி உணவு கையாளும் இடப் பரப்பினை பேணத் தவறி யமை, உபகரணங்களை உரிய முறையில் பேணத் தவறி யமை போன்ற செயற்பாடுக ளுக்கு எதிராக உரிமையாளர் களுக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப் பட்டது.

குறித்த வழக்கு கடந்த வியா ழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது 15 உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண் டதை அடுத்து அவர்களை கடு மையாக எச்சரித்த மன்று உரி மையாளர்களுக்கு தலா ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

அதேவேளை ஒரு உரிமை யாளரின் உணவகத்தில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத் திற்கு சீல் வைக்குமாறு கட் டளை பிறப்பிக்கப்பட்டது. (6-33)

## யாழில் பொங்கல் பொங்கிய அநுரவின் ஆதரவாளர்கள்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிலையில் யாழில் பொங்கல் பொங்கி மகிழ்ச்சியை வெளிப் படுத்திய ஆதரவாளர்கள்.

யாழில் உள்ள கட்சி அலுவலகம் முன்பாக ஆதர வாளர்கள் பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்ப டுத்தியிருந்தனர். (6-33)

## மஹாசண்டி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கில் அமைந்துள்ள ஸ்ரீ வசந்தநாக பூசணி அம்பாள் தேவஸ்தானத் தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியிலிருந்து 11 மணிவரை மஹாசண்டி ஹோமம் நடை பெறும். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாடு அநுரவோடு'

# காலி முகத்திடலில் திரண்ட ஆதரவாளர்கள்



(கொழும்பு)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிலையில் அநுரகுமார திஸாநாயக்கவின் ஆதரவாளர்கள் பலர் காலிமுகத்திடல் பகுதியில் திரண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாடு அநுரவோடு என்ற வாசகம் அடங்கிய பதாகைகள் மற்றும் இலங்கையின் தேசியக் கொடியுடன் உற்சாகமான வரவேற்பை வழங்கியுள்ளனர்.

அத்துடன் புதிய ஜனாதிபதியான அநுரவிற்கு ஆதரவான கோசங்களையும் எழுப்பி தமது மகிழ்ச்சியை அவர்கள் வெளிப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உருளைக்கிழங்கு விலை உயர்வு

(கொழும்பு)

உருளைக்கிழங்கு விலை தற்போது அதிகரித்து வருவதாக உருளைக்கிழங்கு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, மரவள்ளிக்கிழங்கு மற்றும் சேப்பங்கிழங்கு போன்றவற்றின் விலைகளும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உருளைக்கிழங்கு தட்டுப்பாடு மற்றும் அதிக தேவை காரணமாகவே உருளைக்கிழங்கு விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (நி)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(366)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : **00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

**077 839 3974**


# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்த 38 இலட்சம் வாக்காளர்கள்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தல் கால வன்முறைகள் என்பது குறைந்தே காணப்பட்டது.

தேர்தல் முடிவடைந்து 9 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க நேற்று பதவியேற்றுள்ளார்.

எனினும் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 3,820, 738 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட 17, 140,354 வாக்காளர்களில், 79.46% வாக்காளர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். மொத்தம் 13,619,916 வாக்குகள் பதிவாகியுள்ளன.

இவற்றில் 97.8% செல்லுபடியாகும் வாக்குகள், 13, 319,616 என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இருப்பினும், 300,300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன, இது மொத்த வாக்குகளில் 2.2% ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக இம்முறையே வாக்காளர் ஒருவர் 50 வீத வாக்குகளை பெற முடியாமல் விருப்பத்தேர்வு வாக்குகள் எண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்:5'8"
தகைமை/தொழில்: PHD, Pharmacist(gov)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14792

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: விசாகம்
8 இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L, Businees(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14794

பிறப்பு:1999-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L, கோவில் பூசகர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14795

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல் செவ்
கி.பா: 22
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Civil Engineer
எதிர்பார்ப்பு: Engineer
தொ.இ: G/14753

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 10
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, NGO
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14755

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்:5'4"
தகைமை/தொழில்:கால்நடை வைத்தியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14758

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மா[illegible] மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை



# மணிவிழா வாழ்த்து



திருமதி.

## அன்பரசி பாஸ்கரன்

வாழ்த்துக்கவி

அகத்தில் வாஞ்சையுடன் புன்னகை தவழ்ந்திட
அறிவுப்பசிக்கு அமிர்தம் அளித்தவரே அன்பரசி ஆசான்
முப்பத்துநான்கு வருடம் கடந்தும் நற்பணியாற்றி
பள்ளி மாணவரின் மனங்களில் நிறைந்தவர்.

முத்தமிழில் இருதமிழை சிரம் ஏந்தி
சிந்தைக்கினிய செயலாற்றி மகிழ்ந்தவர்
அகவை அறுபதை அழகுடன் அணிமித்து
ஓய்வு பெறும் எங்கள் ஆசான்
ஓய்வுக்காலமெல்லாம் தீது ஏதுமின்றி
வளம் கொழித்து வாழ வாழ்க என
வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

- கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி (16.03.1990 - 31.12.1990)
- கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம் (01.01.1991 - 31.12.2004)
- கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் (03.01.2005 - 31.12.2013)
- கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் (08.01.2014 - 23.09.2024)

23.09.2024 திங்கட்கிழமை அன்று தனது சேவையை நிறைவு செய்து மணிவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் ஆசிரியரும் பகுதித்தலைவருமான திருமதி.அன்பரசி பாஸ்கரன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைவதோடு ஓய்வுக்காலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.


வாழ்த்துவோர்-

(C-1237)

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்,கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா துயரத்தால் வேதனை
## பாலஸ்தீன ஜனாதிபதியிடம் மோடி உருக்கம்



(ஜெருசலேம்)

காசாவில் நடக்கும் துயர நிகழ்வுகள் வேதனை அளிக்கிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.

இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினைக்கு, இரு நாடுகள் தீர்வு காண இந்தியா நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்த உலகத் தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர். அதே நேரத்தில், காசாவின் மோசமான நிலைமை குறித்து இந்தியா மீண்டும் மீண்டும் கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது. காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பியது.

இந்நிலையில், அமெரிக்கா சென்றுள்ள நிலையில், நியூயோர்க்கில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். அப்போது பிரதமர் மோடி, "பாலஸ்தீன மக்களுக்கு இந்தியா தொடர்ந்து தமது ஆதரவை நல்கும். காசாவில் நடக்கும் துயர நிகழ்வுகள் கவலை அளிக்கிறது. காசா- இஸ்ரேல் இடையேயான போரில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்" என பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இது குறித்து சமூக வலைத் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், "நியூயோர்க்கில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்தேன். பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என தெரிவித்தேன். பாலஸ்தீன மக்களுடன் நீண்ட கால நட்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தேர்தலில் தோற்றால் இதுவே கடைசி
## டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்பிடம் நீங்கள் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவீர்களா? என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் 2024 இல் வெள்ளை மாளிகைக்குத் திரும்பும் முயற்சியில் தோல்வி அடைந்தால் 2028 இல் மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடுவேன் என நினைக்கவில்லை என தெரிவித்தார். (நி)

# தென் அமெரிக்காவில் கடும் வறட்சி
## சிவப்பு எச்சரிக்கை விடுப்பு



(வோஷிங்டன்)

தென் அமெரிக்காவின் பல பகுதிகளில் பாரியளவு வறட்சி நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஈக்வடோரில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவு வறட்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


இரண்டு மாதங்களுக்கு மேல் அங்கு மழை பெய்யாததன் காரணமாகத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அத்துடன் தென் அமெரிக்காவின் 15 இற்கும் மேற்பட்ட நகரங்களுக்கு வறட்சி குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பகுதிகளில் நாளொன்றுக்கு 15 மணித்தியாலங்களுக்கும் மேல் மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பல பகுதிகளுக்குக் காட்டுத்தீ பரவுவதற்கான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# அடுத்து யாரை அழைப்பது
## மேடையில் பைடனுக்கு ஏற்பட்ட மறதி



(வோஷிங்டன்)

குவாட் மாநாட்டின் போது, மேடையில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அடுத்து யாரை அழைப்பது என மறந்து தடுமாறிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

ஜோ பைடனுக்கு 81 வயதாகிறது. வயது முதிர்வு காரணமாக தடுமாறி வருகிறார். இதனால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவில் குவாட் அமைப்பின் மாநாடு நடந்தது. இதில் ஜனாதிபதி பைடன், பிரதமர் மோடி, ஆஸி., பிரதமர் அந்தோனி அல்பேன்ஸ், ஜப்பான் பிரதமர் பிமியோ கிஷிடா ஆகியோர் கலந்து கொண்டனர். பிறகு இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் புற்றுநோயால் அவதிப்படுபவர்களுக்கு உதவும் வகையில் நலத்திட்டம் தொடக்க விழா நடந்தது.

இந்த திட்டத்தில் பேசிய

பை
வொ
கொ
அ
அறி
நேர
ஏற்ப
அறி
அடு
டார்
நிகழ்

# பெண்க

# நிறை

(பியாங்யாங்) –

வட கொரிய அரச

சர்வதேச அளவி

யுள்ளன. அந்நாட்

மற்றும் காங் எ

வெளியில் வைத்

தகவல்கள் வெளி

இருவரும் சீனாவில் உள்ள வட கொரிய மக்களை தென் கொரியாவுக்கு தப்பிச் செல்ல வைக்க உதவி வந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த 2023 ஒக்டோபர் மாதம் சீனாவால் வலுக்கட்

டாயம
பட்ட சு
களில்
43 வ
வரும்
போன
சிக்கி

# ஹிஸ்புல்லா
# இஸ்ரேல்



(நைரோபி)


லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்கள் உட்கட்டமைப்பு வசதிகளிற்கு அருகில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு இஸ்ரேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...களுக்கு மரணதண்டனை நிறைவேற்றிய வடகொரியா!

(...ங்)

... அரசின் சமீபத்திய செயற்பாடுகள் ...ளவில் கவலையை ஏற்படுத்தி ...ந்நாட்டின் சோங்ஜின் பகுதியில் ரி ...ங் என இரு பெண்கள் பொது ...வைத்து தூக்கிலிடப்பட்டதாகத் ...வளியாகி உள்ளன.




டாயமாகத் திருப்பி அனுப்பப் பட்ட சுமார் 500 வட கொரியர் களில் 39 வயதான ரி மற்றும் 43 வயதான காங் என இரு வரும் அடங்குவர். இதே போன்ற குற்றச்சாட்டுகளில் சிக்கிய ஒன்பது பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ளதாகத் தகவல் வெளி யாகி உள்ளது.

இது குறித்து ரேடியோ ஃபிரீ ஆசியா வெளியிட்டுள்ள தக வல்களில், பொது வெளியில் உள்ள சந்தையில் நூற்றுக் கணக்கானோர் முன்னிலை யில், ரி மற்றும் காங் கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி தூக்கி லிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.

முன்னதாக இருவர் செய்த குற்றம் தொடர்பாக ஒரு மணி நேரம் மட்டுமே விசாரணை நீடித்தது. அன்றைய நாள் காலை 11 மணிக்குத் தொடங் கிய விசாரணை, அதேநாளில் ஹம்கி யோங் மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளால் இர ண்டு பெண்களுக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட் டது. (நி)

# ...லா மறைவிடங்கள் மீது ...ல் தீவிர தாக்குதல்



...ப் ...கி ...ள ...ல்

கேட்டுக்கொண்டுள்ளது.

லெபானில் உள்ள ஹிஸ்புல்லா இலக்குகள் மீது தீவிரதாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

லெபனானில் இஸ்ரேல் மேற் கொண்ட தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆறு பேர் காயமடைந்தனர் என லெப னான் ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கிலேயே இந்த தாக் குதல்கள் இடம்பெற்றுள்ளன.

மந்தை மேய்ப்பவர் ஒருவரே உயிரிழந்தார் அவரது குடும் பத்தினர் காயமடைந்துள்ளனர் என லெபனான் அரசாங்கத்தின் தேசிய செய்தி முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை தென்லெப னான் மீது இஸ்ரேல் படை யெடுக்குமா என்ற கேள்விக்கு இஸ்ரேலின் இராணுவ அதி காரியொருவர் தற்போது வான் வெளி நடவடிக்கை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ளார். (நி)

பைடன், தலைவர்கள் ஒவ் வொருவரை அறிமுகம் செய்து பேசி கொண்டு இருந்தார்.

அப்போது பிரதமர் மோடியை அறிமுகம் செய்ய வேண்டிய நேரத்தில் அவருக்கு திடீரென மறதி ஏற்பட்டது. அடுத்து நான் யாரை அறிமுகம் செய்ய வேண்டும்? அடுத்தது யார்? என மைக்கில் கேட் டார். அப்போது, அங்கிருந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தவர், பிரதமர் மோடி எனக் கூறினார். உடனடியாக அங்கு மோடி எழுந்து வந்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதற்கு முன்னர், வோஷிங்டன்னில் நடந்த நேட்டோ மாநாட்டில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை அறிமுகம் செய்யும் போது உக்ரைன் ஜனாதிபதி புடின் என பெயரை கூறி அங்கிருந் தவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி னார். (நி)

# நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிப்பு 51 பேர் உயிரிழப்பு

## ஈரானில் துயரம்



(டெஹ்ரான்)

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இருந்து தென் கிழக்கே சுமார் 540 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தபாஸ் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் செயற் பட்டு வருகிறது.

இங்கு 70 இற்கும் மேற் [illegible] இந்த நிலையில் நிலக்கரி சுரங் கத்தில் மிதேன் வாயு கசிவு காரணமாக திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள் ளது.

இதில் இதுவரை 51 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 20 பேர் படுகாயம் அடைந் துள்ளதாகவும் தெரியவந் துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு மீட்புக்குழுவினர் விரைந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

காயம் அடைந்தவர் களை மீட்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாகவும் சுரங் கத்துக்குள் மேலும் சிலர் சிக்கி இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிவிக்கப்படும் பதவி விலகல்கள்



(கொழும்பு)

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டதை அடுத்து தொடர்ந்து அமைச்சர்கள் உள்ளிட்ட பலரின் பதவி விலகல் தொடர்பான அறிவிப்புக்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் தற்போது இரண்டு மாகாணங்களின் ஆளுநர்கள் தங்களது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

இதன்படி வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் தமது ஆளுநர் பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

முன்னதாக நேற்று முன்தினம் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவும் ஆளுநர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

இதேவேளை, பிரதமர் தினேஸ் குணவர்தன தனது பதவி விலகலை நேற்று காலை அறிவித்துள்ளார். (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு

## பணிப்பாளர் கைது

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள் தொடர்பான முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை அடுத்து இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 150-220 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 200-250 | 320 |
| தக்காளி | 160 | 160 | 220 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 150-200 | 200 |
| கோவா | 230 | 300 | 250 | 320 |
| கரட் | 200 | 400 | 260 | 400 |
| பூசணி | 80 | 50 | 60 | 80 |
| புடோல் | 80 | 120 | 100 | 300 |
| வாழைக்காய் | 150 | 220 | 200-250 | 300 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 250 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 500 |
| வெண்டக்காய் | 80 | 80 | 150-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 240 |
| பயற்றங்காய் | 350 | 400 | 250-300 | 400 |
| லீக்ஸ் | 320 | 400 | 300 | 600 |
| பீற்றூட் | 100 | 100 | 80-120 | 200 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400-520 | 600 |
| போஞ்சி | 400 | 600 | 200 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 70 | 150 |
| தேசிக்காய் | 500 | 300 | 450-550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 90-150 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 680 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 150 |

# இன்று ஒரு தகவல் 230



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனுநீதி

எப்போது பார்த்தாலும் அந்த நாட்டில் அப்படி இருந்தது. இந்த நாட்டிலே இப்படி இருந்தது என்று சொல்லிக் கொண்டு இருகின்றார்களே தவிர நமது நாட்டில் எப்படி இருந்தது என்று சொல்ல மாட்டேன் என்கின்றீர்களே சார் என்றார் ஒருவர்.

அவர் சொல்வதும் நியாயம் தான். இடையிடையே எமது பெருமையையும் பேசச்சொல்கின்றார். எமது பழம் பெருமை எப்படிப் பட்டது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும் இடையிடையே அதை நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது.

மனு நீதிச்சோழன் கதை எல்லோருக்கும் தெரியும். அது போல் மத்திய பிரதேசத்தில் ஒரு மனு நீதிச் சோழன் இருந்தார். அவர் தான் மகாராஜா வீர சிங்தேவ் ஒரிஷா மன்னன்.

அவருடைய பிள்ளை ப்ரவிய்ராய் இளவரசன். அப்பாவிற்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது என்று சொல்லுவோம் தானே. ஆனால் அந்தப்பிள்ளை தப்பிப் பிறந்து இருக்கிறது. அந்த இளவரசன் என்ன செய்தான் என்றால் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அப்பிடிப் போன இடத்திலே ஒரு துறவியைக் கொன்று விட்டான்.

இதைக் கேள்வியுற்ற உடனே அவனை கைது செய்யும்படி உத்தரவிட்டார் ராஜா. கைது செய்து கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

ராஜா பார்த்தார் அந்தத் துறவியைக் கொன்றது நீ தானே என்று தன் மகனைப் பார்த்து கேட்டார். இளவரசனும் திமிராக பதில் கூறினான்.

நான் கொலை செய்யவில்லை. என்னுடைய வேட்டைக்கு இடைஞ்சலாக இருந்த சாமியாரின் அசட்டைத் துணிச்சலுக்குத் தண்டனை கொடுத்தேன். அவ்வளவு தான் என்றான்.

அங்கே நின்று கொண்டிருந்த அரசாங்க முக்கியஸ்தர்கள் எல்லாம் இந்த இளவரசனுக்காக ராஜாவிடம் பரிந்து பேசினார்கள்.

மகாராஜா இளவரசனுக்கு கடுமையான தண்டனை எதையும் கொடுத்து விடாதீர்கள் ஏன் என்றால் உங்கள் சிம்மாசனத்திற்கு வாரிசாக வரப் போகின்றவர் அவர் என்றார்கள்.

குடிமக்களின் மாணிக்கமாக விளங்கிய ஒரு துறவியை இவன் கொன்று விட்டு வந்து நிற்கின்றான் அதை நியாயப்படுத்தி பேசுகின்றான். இவன் எப்படி இந்த சிம்மாசனத்திற்கு வாரிசாக முடியும் என்று கேட்டார் ராஜா.

அது மட்டுமல்ல மக்கள் பேரிலே சம நோக்கம் நீதி வழங்குகின்ற உறுதியும் பிள்ளைப் பாசம் என்கின்ற பெருமூச்சுப்பட்டு கருகி போய்விடக் கூடாது என்று முழங்கினார். அடுத்த விநாடியே தந்தையினுடைய வாளுக்கு மகன் இரையாகினான்.

அந்த மகாராஜா மற்றவர்களைப் பார்த்து கம்பீரமாகப் பேசினார். திமிர் பிடித்த இந்த இளவரசன் போய்விட்டதாலே சிம்மாசனத்திற்கு வாரிசு இல்லாமலே போய்விட்டது என்று யார் சொன்னது.

அந்த நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொரு குமாரனும் அரச குமாரன் தான். ஒவ்வொரு இளைஞனும் இளவரசன் தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த சிம்மாசனத்திலே உட்காரக் கூடிய தகுதி உண்டு என்றார்.

இந்த அளவிற்கு நீதியும் நேர்மையும் அங்கேயிருந்ததினாலே ஒருமைப்பாட்டிற்கு ஒரு கோட்டையாக விளங்கியதாம் அந்த நாடு. அதனாலே அந்த நாட்டிற்கு எதிராக எந்தப் பகைவரும் எதுவும் செய்ய முடியவில்லையாம். போதுமா சார் பழம் பெருமை இன்னும் வேண்டுமா?

அதையெல்லாம் சொல்லி உங்கள் வயிற்றெரிச்சலை கிளப்பவேண்டாம் என்பதற்காகத் தான் அடிக்கடி வெளிநாட்டுக் கதைகளாகப் பேசிக்கொண்டிருந்தோம். வேறு ஒன்றும் இல்லை.

நமக்குத் தெரிந்த ராஜா கதையெல்லாம் வேறு மாதிரியாகத் தான் இருக்கிறது. ஒரு ஊரிலே ஒரு சர்வாதிகாரி இருந்தார். ஒரு நாள் அந்த நாட்டுச் சிறை அதிகாரி அவர் முன்னால் வந்து நின்றார்.

அவர் என்ன விடயம் என்று விசாரித்தார். எமது சிறைக்கைதிகள் எல்லாம் தங்களின் அறைகளில் தொலைக்காட்சிப் பெட்டிவைக்க வேண்டும் என்று போராடுகிறார்கள் என்றார் சிறை அதிகாரி.

அதனால் என்ன வைத்துக் கொடுத்து விடுங்கள் என்று உத்தரவு போட்டார். சிறிது நாட்கள் கழித்து மறுபடியும் அந்த சிறை அதிகாரி வந்தார். சர்வாதிகாரியைப் பார்த்தார்.

எமது சிறைக்கைதிகள் எல்லாம் இப்போது வாரம் ஒரு நாள் விடுமுறை வேண்டும் என்று கேட்டு போராடுகிறார்கள் என்றார். கூட இருந்த தளபதி சர்வாதிகாரியைப் பார்த்து கொஞ்சம் கடுமையாக இதோ பாருங்கள் நாம் சலுகை காட்டவேண்டியது பாடசாலைகளுக்கு. சிறைச்சாலைக்கு அல்ல என்று கூறினார்.

சர்வாதிகாரி அதைக் கேட்டு அலட்டிக்காமல் தளபதியைப்பார்த்து அது சரி நாம் எல்லோரும் பதவியை விட்டு விலகியதும் பாடசாலைக்குப் போவோம் என்றா நினைக்கிறாய் என்றாராம் புத்திசாலி சர்வாதிகாரி. போகுமிடம் எதுவென்று இப்போதே தெரிந்து வைத்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர; மன்னாரில் வெற்றிக் கொண்டாட்டம்



(மன்னார்)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்றுக் காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து மன்னாரில் ஆதரவாளர்களினால் வெற்றிக் கொண்டாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஜார் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட கிளையினால் நேற்று வெற்றி கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டு தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர். குறித்த நிகழ்வில் ஆதரவாளர்கள் மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (6-285)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 39 பேர் மருத்துவமனையில்

(ஹற்றன்)

மஸ்கெலியா ப்ரவுன்ஸ்விக் தோட்டப் பகுதியில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 39 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்களில் 35 பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ள அதேநேரம், 4 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்களில் ஆணொருவரும் அடங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# விருப்பு வாக்கு தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்

## பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு குழு



(கொழும்பு)


இம்முறை நடைபெற்று முடிவடைந்த ஜனாதிபதித் தேர்தலில் விசேடதேவையுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏற்றவாறு தேர்தல்கள் ஆணைக் குழுவினால் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் பாராட்டுக்குரியவையென பொது நலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பிரசார நடவடிக்கைகளின் போது அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, விருப்பு வாக்களிப்பு செயன்முறை தொடர்பில் வாக்காளர்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்பட்டதாகவும் இது குறித்து எதிர்வரும் தேர்தல்களில் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும் என்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (6)

# இருக்கைகள் அற்ற நிழற்குடைகள்

## பயணிகள் அவதி



(கிளிநொச்சி)

பயணிகள் நிழற் குடைகள் அமைந்துள்ள பகுதிகளில் அமர்ந்து கொள்வதற்கான இருக் கைகள் இன்மையால் பயணிகள் அசௌகரியம்.

பரந்தனில் இருந்து கிளிநொச்சிப் பகுதிக்கு செல்லும் மக்கள் குறுந்தூரமாக இருந்தாலும் நீண்டதூரமாக இருந்தாலும் அங்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இரண்டு பயணிகள் நிழற் குடைகள் அந்தப் பகுதியில் காணப்பட்டாலும் அவற்றில் பயணிகள் இருந்து செல்வதற் கான வசதிகள் எவையும் காணப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் நீண்ட நேரம் காத்திருக்கும் பயணிகள் நிழல் குடை களின் கீழ் இருந்து கொள்ள முடியாது வீதி ஓரங்களில் காத் திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர். (6)

# மாற்றத்தை விரும்பிய மக்களின் விருப்பங்கள் நிறைவேற வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களின் மன விருப்பங்கள் நிறை வேற்றப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலையே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் மன விருப்பங்களிற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

அதேவேளை சமத்துவமான தேசத்தை உருவாக் கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனா திபதி அநுர குமார திஸா நாயக்க அனைத்து மக் களினதும் கனவுகளை ஈடேற்றுவார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(6)

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலராக ரவி செனேவிரத்ன

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனேவிரத்ன தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

அவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால், இன்று இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது. (6)

# விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் மனித வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் 2024/2025 கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர் வில் கணிதம் மற்றும் முதல் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந் திருப்பதோடு அவற்றுள் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியினை கொண்டிருத்தல் அல்லது 30 கிரடிற் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான NVQF மட்டம் 3 இல் சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சம மான அல்லது உயர் தகைமைகள் கொண் டிருக்க வேண்டும். மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட வராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 14.11.2024ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிற வுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாக மற்றும் 021 222 3374 என்னும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கமுடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (6)

# திலீபன் நினைவாக நல்லூரில் இரத்ததானம்



தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினை வேந்தல் தினத்தை முன் னிட்டு அவரின் நினைவாகத் தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டு குருதி தானம் வழங்கியிருந்தனர். (6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 3

காவியத் தொடர் 588





அவன் மனத்திற்குள் புதைத்து கொண்டிருந்த தீ பூங்குழலியைப் பார்த்ததும் கொழுந்துவிடத்தொடங்கியது. பூங்குழலி அவனை மறுதளித்ததுடன் பரிகாசமும் செய்தாள். அவள் தன்னைக் காட்டிலும் வந்தியத்தேவனை அதிகம் மதிக்கிறாள் என்று தெரிய வந்ததும் பினாகபாணியின் பைத்தியம் முற்றி விட்டது. வந்தியத்தேவனைத் தொடர்ந்து வந்த வீரர்களிடம் அவனைக் காட்டிக்கொடுக்கவும் துணிந்தான்.

பழுவேட்டரையரின் ஆட்கள் வந்தியத்தேவனைப் பிடிக்க முடியாமல் பினாகபாணியைப் பிடித்துக் கொண்டு தஞ்சை சென்றார்கள். சிறிது நேரம் அவன் பாதாளச் சிறையில் வசிக்கும்படி நேர்ந்தது. இதனாலெல்லாம் அவனுக்கு முன்னமே வந்தியத்தேவனிடம் உண்டாகியிருந்த கோபம் மேலும் வளர்ந்தது.

இளவரசி குந்தவை அவனைப் பார்த்துப் பேசி விடுதலை செய்வதற்காகப் பாதாளச் சிறைக்குப் போவதற்கு முன்னாலேயே அவன் விடுதலையாகியிருந்ததைக் கண்டோம். விடுதலை செய்தவள் பழுவூர் இளையராணி நந்தினிதான். தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்தியத்தேவன் தஞ்சை அரண்மனையிலிருந்து தப்பிச் சென்றது பற்றி நந்தினி கோபமும், சந்தேகமும் கொண்டிருந்தாள்.

அவன் பழையாறை சென்று, பிறகு ஈழநாட்டுக்குத் தப்பிச் சென்றதை அறிந்த பிறகு அவளுடைய சந்தேகம் அதிகமாயிற்று. எப்படியும் ஒரு நாள் பழையாறைக்குத் திரும்பி வந்து, இளவரசி குந்தவையைப் பார்க்க முயல்வான் என்று ஊகித்தாள். அப்போது அவனைக் கண்டுபிடித்துச் செய்தி அனுப்பப் பழையாறையில் தனக்கு நம்பகமான ஆள் ஒருவன் வேண்டும் என்று தீவிரமாக எண்ணினாள்.

வைத்தியர் மகன் பினாகபாணியைப் பார்த்துப் பேசிய பிறகு அவன் அந்த வேலைக்குச் சரியான ஆள் என்று முடிவு செய்தாள். அவனிடம் அந்தப் பெரிய பொறுப்பை ஒப்புவித்தாள்.

"உனக்குத் துரோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றவன் சீக்கிரத்தில் ஒருநாள் பழையாறைக்குத் திரும்பி வருவான். நீ கண்ணும் கருத்துமாகப் பார்த்திருந்து, அவன் எங்கெங்கே போகிறான், என்னென்ன செய்கிறான், என்பதைக் கவனித்து எனக்கு உடனே சொல்லி அனுப்ப வேண்டும். அவ்விதம் செய்தால் உனக்கு வேண்டிய வெகுமதிகளை அளிப்பேன்" என்றாள்.

பின்னர் சின்னப் பழுவேட்டரையரும் அவனை அழைத்து வந்தியத்தேவனைப் பற்றிக் கட்டளை இட்டார். "அந்த இராஜத்துரோகி திரும்பி வரும்போது, அவனைப் பிடித்துக் கொடுத்தால் உன்னை நமது ஒற்றர் படையில் சேர்த்துப் பெரிய அதிகாரியாக்கி விடுவேன்" என்று அவனுக்கு ஆசை காட்டியிருந்தார்.

அது முதல் பினாகபாணி மருத்துவத் தொழிலில் பற்றை இழந்துவிட்டான். ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டே பழையாறை நகரின் வீதிகளில் ஓயாமல் அலைந்து கொண்டிருந்தான். திடீர் திடீரென்று அவனுக்குச் சந்தேகம் உதித்துவிடும். வீதியில் போகிறவர்களின் அருகில் ஓடிச்சென்று முகத்தை உற்றுப் பார்ப்பான். "இவன் இல்லை!" என்று முணுமுணுத்துக் கொண்டே அப்பால் செல்வான். இதைப் பார்த்த பலரும் வைத்தியர் மகனுக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டதென்று எண்ணத் தொடங்கினார்கள்.


ஆயினும், பினாகபாணி தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை. மதுராந்தகத்தேவரும், அவருடைய பரிவாரங்களும் பழையாறைக்குள் பிரவேசித்தபோது பினாகபாணி அவர்களை அவ்வளவு நன்றாகக் கவனிக்கவில்லை. அவர்களில் வந்தியத்தேவன் இருக்கக் கூடுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. திருநாரையூர் நம்பியின் பல்லக்கைச் சூழ்ந்திருந்த பெருங்கூட்டத்திலே அவன் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்



## மணியால் வந்த சோதனை



(நேற்றைய தொடர்ச்சி...)

மணிச் சத்தம் கேட்டாலே பப்பு வருகிறது என தெரிந்து கொண்டார்கள். அதன் பிறகு பப்புவால் யாரையும் கடிக்க முடியவில்லை. பப்பு அருகில் வரும் சத்தம் கேட்டதுமே எல்லோருமே ஒதுங்க ஆரம்பித்தார்கள். பப்புக்கு அவர்களின் பாசம் கிடைக்காததால் சோகமானது.

•

சரி, அவர்கள் [illegible] தன்னிடம் வி[illegible]டவோ கொஞ்சவோ செய்யவில்லை என்பதை புரிந்து கொண்ட பப்பு மற்ற நாய்களுடன் சென்று விளையாடலாம் என முடிவெடுத்து அங்கிருந்த நாய் கூட்டத்திற்குள் ஜாலியாக உள்ளே நுழைய அதில் இருந்ததில் ஒரு பெரிய நாய் பப்புவை பார்த்து கோபமாக கத்தியது.

எதுவும் புரியாத பப்பு என்கூட விளையாட வரமாட்டீங்[illegible] [illegible] என்கிட்ட மணி இருக்கு. உங்கள்ல யார் கிட்டயாச்சும் இருக்கா? நான் தான் உங்களை விட கெத்து அதான் எனக்கு மணி எல்லாம் போட்டிருக்காங்க..

சரி வாங்க விளையாடலாம் என கேட்டது. மீண்டும் கோபப்பட்ட அந்த பெரிய நாய், முதலில் கூட்டத்தில் இருந்து தள்ளி நில். அப்புறம் இது ஒன்னும் உன்ன பெருமைப்படுத்த மாட்டவில்லை.

உன் தொல்லை தாங்காமல் நீ வந்தால் பாதுகாப்பாக இருக்க ராஜன் மாட்டியுள்ளார் என்று சொன்னதும் சோகமானது பப்பு. அது மற்றவர்களை எந்த அளவுக்கு தொல்லை கொடுத்துள்ளது என்பது அப்போதுதான் புரிய வந்தது.

அதில் இருந்து யாரிடமும் வம்புக்கு போகாமல் பாசமாக பழகியது பப்பு.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் தடைக்கல்லாய் காண்பதற்குப் பதில்,
வெற்றியின் படிகளாய் காண்போம்!

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் சித்தாந்தத்தில் தேர்ச்சியுள்ள சிங்கள மக்கள்

நாட்டின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இஃது இலங்கையின் அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள ஒரு பெரும் மாற்றமெனலாம்.

இங்குதான் சிங்கள மக்களின் அரசியல் முதிர்ச்சியும் அவர்களிடம் உள்ள ஒற்றுமையும் அரசியல் சித்தாந்தத்தில் அவர்களிடம் இருக்கக்கூடிய தேர்ச்சியும் எத்துணை உயர்வானதென்பது தெரியவருகிறது.

ஆம், ஒரு காலத்தில் சிங்கள மக்களால் வெறுக்கப்பட்டவர்கள் ஜே.வி.பியினர்.

சேகுவேரா கிளர்ச்சியின் மூலம் சிங்களவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

இதன் தாக்கம் இந்த நாட்டில் நீண்டு நிலைத்திருந்தது.

அதேநேரம் சேகுவேரா புரட்சியில் ஈடுபட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனுபவித்த துன்பங்களும் சித்திரவதைகளும் கொஞ்சமல்ல.

இத்தகு அரச சித்திரவதைக்கு இன்றைய ஜனாதிபதியின் உடன்பிறந்த சகோதரியும் ஆளாகினார் என்பது வரலாறு.

நிலைமை இதுவாக இருக்கையில், சேகுவேரா புரட்சியாளர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்கின்றனர்.

இருந்தும் ஜனநாயக நீரோட்டத்தில் ஜே.வி.பி இணைந்து கொண்டாலும் சிங்கள மக்கள் அவர்களை உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை, மாறாக அவர்களுக்குத் தகுதிகாண் காலத்தை விதிக்கின்றனர்.

இதற்கு நல்ல உதாரணம், கடந்த பொதுத் தேர்தலில் கூட ஜே.வி.பி மூன்று ஆசனங்களை மட்டுமே பாராளுமன்றத்தில் பெற்றிருந்தது.

இவ்வாறாக இருந்த ஜே.வி.பி இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியைத் தனதாக்கி உள்ளது.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது.

ஆட்சியில் இருந்தவர்கள் நாட்டின் செல்வத்தைச் சூறையாடிவிட்டனர்.

இதனால் ஏழைச் சிங்கள மக்களின் நாளாந்த சீவனோபாயம் அல்லாடலாயிற்று.

இங்குதான் சிங்கள மக்கள் ஊழல் புரிந்த ஆட்சியாளர்களை ஆட்சிப்பீடத்தில் இருந்து விரட்டுகின்றனர்.

அதேநேரம் நாட்டின் ஜனநாயகத்துக்கு எந்தவகையிலும் பங்கம் ஏற்படாமலும் பார்த்துக் கொள்கின்றனர்.

அவர்களின் அந்த உயரிய அரசியல் தத்துவத் தேர்ச்சி காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு நாட்டை அமைதியாக்க ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சந்தர்ப்பம் வழங்குகின்றனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் சஜித் பிரேமதாஸவை அவர்கள் வஞ்சிக்கவும் இல்லை.

ஆயினும் ஊழல் ஆட்சிக்குள் தலைமை தாங்க சஜித் விரும்பவில்லை.

ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாக ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தினாராயினும் ஊழல் புரிந்தவர்களைக் காப்பாற்றுவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இங்குதான் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதி ஆக்குவதுதான் சமகால சூழ்நிலைக்கான ஒரே தீர்வு எனச் சிங்கள மக்கள் முடிவு செய்கின்றனர். அந்த மாற்றம் நடந்தாயிற்று.

ஆம், இந்த இடத்திலேனும் சிங்கள மக்களின் அரசியல் தேர்ச்சி பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

# எனது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருகிறேன்

## அலிசப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய அலிசப்ரி தனது அரசியல் வாழ்க்கையை முடிவிற்கு கொண்டுவரவுள்ளதாக தெரிவித்துள்ளார். சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுச்சேவையை நிறைவுசெய்யும் இவ்வேளையில் எனது முயற்சிகளை ஆதரித்த, வழிகாட்டிய மற்றும் ஆக்கபூர்வமாக விமர்சித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன். உங்கள் நம்பிக்கையும், ஊக்கமும் தான் இந்த பயணம் முழுவதும் என்னைத் தாங்கிய தூண்கள்.

2019ம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்துவைத்தபோது எனது நாட்டிற்கு சேவைசெய்ய குறிப்பாக நீதியமைச்சை சீர்செய்வதில், எனது வாழ்நாளின் பெரும்பகுதியை நான் அர்ப்பணித்த துறையில்,ஒரு தெளிவான பார்வையால் உந்தப்பட்டேன்.நாங்கள் பயணிக்கப்போகும் பாதை எதிர்பாராதவிதமாக கரடுமுரடானதாக மாறுகின்றது. உலகமும் நாடும் விரைவில் அசாதாரண சவால்களின் பிடியில் சிக்கின.

கோவிட் - 19 பெருந்தொற்றும்,அதன் பின்னர் உக்ரைனில் வெடித்த போரும்,அதன் தீவிரமான நீண்டவிளைவுகளும்,சர்வதேச ஸ்திரதன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தின.இது எங்கள் நாட்டின் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடிக்கு வழிவகுத்தது. நாம் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் எங்களின் மீள் எழும் திறனை சோதனை செய்தது.இந்தக் கடினமான காலங்களில் எனக்கு பல பதவிகளில் சேவையாற்றுவதற்கான கௌரவம் கிடைத்தது. நீதியமைச்சராக, நிதியமைச்சராக இறுதியாக வெளிவிவகார அமைச்சராக ஒவ்வொரு பதவியும் அவற்றிற்கே உரிய சவால்களுடன் வந்தன என்று பதிவிட்டுள்ளார்.

(ம-7)

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நம்பிக்கை அளித்துள்ளது

## ஊடகவியலாளர் லசந்த மகள்

2024 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தமக்கு புதிய நம்பிக்கையை அளித்துள்ளதாக மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட அஹிம்சா விக்கிரமதுங்க, இலங்கையின் அண்மைக்கால மனித உரிமை வரலாற்றில் இடம்பெற்றுள்ள அட்டூழியங்களுக்கு இப்புதிய தலைமை மாற்றம் ஏற்படுத்தும் எனத் தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ராஜபக்ஷவின் பயங்கரவாத ஆட்சியின் கீழ் பயங்கரமான இழப்புகளை சந்தித்த எனது தந்தை மற்றும் பல குடும்பங்களுக்கு நீதி வழங்குவதாக உறுதியளித்த அநுரகுமார திஸாநாயக்காவுக்கு தான் இந்த சந்தர்ப்பத்தில் வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் அஹிம்சா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

# பொதுத் தேர்தலுக்கு தயாராக இருங்கள்

## ஐ.தே.க வினருக்கு ரணில் அறிவுறுத்தல்

பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடத் தயாராக இருக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் நிர்வாகக் குழுவிற்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேட்பு மனு தயாரிக்கும் போது புதிதாக ஐந்து பேருக்கு வாய்ப்பு வழங்குமாறும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

(ம-7)

# பாதுகாப்பு அமைச்சிற்கு செயலாளர் நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஓய்வுபெற்ற விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 52 (I) பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சீன தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக பாதுகாப்புக் கல்வி தொடர்பான விஞ்ஞானப் பட்டதாரியான அவர், கொத்தலாவல தேசிய [illegible] பட்டதாரியுமாவார்.

எம்.ஐ 24 தாக்குதல் ஹெலிகொப்டர் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி, அநுராதபுரம் விமானப்படை தளத்தின் முன்னாள் கட்டளை அதிகாரி, சீனதுறைமுக விமானப் படை கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் கட்டளை அதிகாரி மற்றும் விமானப்படை தலைமையகத்தில் முன்னாள் பயிற்சிப் பணிப்பாளரான அவர் வீரவிக்ரம, விபூஷண ரணவிக்ரம மற்றும் ரண சூர பதக்கங்களையும் வென்றுள்ளார்.

(ம-7)

# கஞ்சனவும் பதவி விலகினார்

எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுப் பதவியிலிருந்து நீங்கிவிட்டதாகவும் தன்னிடம் இருந்த அரச வாகனங்கள் மற்றும் அலுவலகத்தை நேற்று முன்தினம் ஒப்படைத்துவிட்டதாகவும் முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மேலும் தனது பொறுப்பில் இருந்த நிறுவனங்களை 2022 இல் இருந்த நிலையில் இருந்து மீட்டு வலுவான நிதி இருப்புடைய நிறுவனங்களாக மீள ஒப்படைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நான் அரச வாகனங்கள் மற்றும் எனது அலுவலகத்தை நேற்று முன்தினம் (22) மீள ஒப்படைத்துவிட்டேன். மேலும் எனது அமைச்சு பதவியிலிருந்தும் நீங்கிவிட்டேன். எனது நிர்வாகத்தின் கீழ் இருந்த நிறுவனங்களின் நிதி நிலைமை உறுதியாக இருக்கிறது.

எரிசக்தி மற்றும் மின்சக்தி வழமை போல் இயங்குவதற்கு தேவையான பொருள் இருப்புகளும் இருக்கின்றன. அனைத்து நிறுவனங்களிலும் இப்போது நேர்மறையான இருப்புநிலைக் குறிப்பு, அதன் சேவைகளுக்கான செலவு மீட்பு, விநியோகத்தர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துதல், நிலுவையில் உள்ள கடனைச் செலுத்துதல் போன்ற செயற்பாடுகள் முறையாக இடம்பெறுவதுடன் அந்த நிறுவனங்களினால் கிடைக்கும் வருமானத்தில் அதிக வருமானத்தை திறைசேரிக்கு வழங்குகின்றன எனத் தெரிவித்தார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

19

### வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள்

வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்திற்கு பின்வரும் விடயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசியல் யாப்பு, பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, வருவாய், பொருளாதாரம், நாணயம், வர்த்தகமும் தொழிலும் (நுகர்வோர் பாதுகாப்பும் உட்பட), போக்குவரத்து (ஸ்கொட்லாந்தின் போக்குவரத்து நீங்கலாக), ரெயில்வே உட்பட போக்குவரத்தும் பாதுகாப்பும் ஒழுங்கமைப்பும் சமூக பாதுகாப்பு மருத்துவ ஒழுக்கநடைமுறை, பிறப்புரிமையியல் (GENETICS), ஒலி- ஒளிபரப்பு, வெளிநாட்டு அலுவலகங்கள், சிவில் சேவை, குடிவரவும் தேசியகுடி அந்தஸ்தும் (IMMIGRATION AND NATIONALITY). சக்தி - மின்சாரம் - நிலக்கரி - எண்ணை - எரிவாயு - அணுசக்தி, தொழில்வாய்ப்பு, சமத்துவமான வாய்ப்புகள் என்பனவாகும்.

### ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்

ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தின் இயலுமைக்குரியனவுமான அதிகாரங்கள் பின்வருவன: சுகாதாரமும் கல்வியும் பயிற்சியும், உள்ளூராட்சி, சமூகப் பணி (SOCIAL WORK), வீடமைப்பு, திட்டமிடல், சுற்றுலாத்துறை, பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழிலுக்கு நிதி உதவி, போக்குவரத்துத் துறையின் சில அம்சங்கள், உள்ளூர் வீதிவலையமைப்பு உட்பட பேருந்து சேவைக் கொள்கை, துறைமுகங்கள், சட்டமும் உள்நாட்டு அலுவல்களும் (குற்றவியல் குடியியல் சட்டங்களின் பெரும்பாகம் இதனுள் அடங்கும்), நீதிமன்றங்களும் வழக்கு தொடுத்தலும், பொலிஸ், தீயணைப்பு சேவை, சூழல் பாதுகாப்பு, இயற்கை மரபு உரிமையும் கட்டிட மரபுரிமையும், விவசாயம், வனங்கள், மீன்பிடி, விளையாட்டுக்கள், புள்ளிவிபரம், பொதுப் பதிவேடுகளும் ஆவணங்களும் ஆகும்.

ஸ்கொட்லாந்தில் நிர்வாக அதிகாரம் உடைய மந்திரிகள் சபைக்கு ஸ்கொட்லாந்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் இருந்து மந்திரிகள் நியமிக்கப்படுவர். முதலமைச்சர் பாராளுமன்றத்தின் தெரிவுப்படி மகாராணியால் நியமிக்கப்படுவார். ஏனைய மந்திரிகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் முதலமைச்சரால் நியமிக்கப்படுவார்.

ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கம் மேலதிகமான நிர்வாக அதிகாரங்களை ஸ்கொட்லாந்து மந்திரி சபைக்கு வழங்கலாம். இதனால் ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றத்தின் நிர்வாக அதிகாரங்களுடன் ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கம் வழங்கக் கூடிய சட்ட வழி அதிகாரங்களையும் (Statutory Powers) ஸ்கொட்லாந்து மந்திரி சபை பிரயோகிக்கலாம்.

ஸ்கொட்லாந்து நிர்வாகத்துறை விரிந்தளவு அதிகாரங்களை உடையது. அது ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும். வெஸ்ட்மினிஸ்டர் விதிகள் (Westminster Rules) அதற்கு ஏற்புடையதாக இருக்கும்.

### செவெல் வழக்காறு (Sewel Convention)

ஐக்கிய இராச்சியத்தின் அதிகார பகிர்வு முறையின் சிறப்பு அம்சங்களில் ஒன்று அதிகாரப் பகிர்வு மூலம் ஸ்கொட்லாந்து சட்டசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் (Devolved Powers) சம்பந்தப்பட்ட விடயங்களில் வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றம் தலையீடு செய்யும் முறையில் சட்டம் இயற்றமாட்டாது. அவ்வாறு சட்டமியற்றினால் அது ஸ்கொட்லாந்து சட்டசபையின் சம்மதத்துடனேயே செய்யப்படும் என்பதாகும்.

இது எழுதப்பட்ட அரசியல் யாப்பு விதியாக அல்லாமல், ஐக்கிய இராச்சியத்தில் பின்பற்றப்படும் வழக்காறுகள் (Conventions) என்ற அரசியல் தத்துவம் சார்ந்ததாக உள்ளது. இது செவெல் பிரபு என்பவர் பெயரால் அழைக்கப்படுகிறது. இவர் ஸ்கொட்லாந்து அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சராக இருந்தவர்.

வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றம் பொதுவாக ஸ்கொட்லாந்துக்கு கையளிக்கப்படும் அதிகாரங்களில் தலையிட்டு சட்டமியற்றாது. அவ்வாறு சட்டம் இயற்றுவதாயின் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தின் சம்மதத்துடனேயே செய்யும் எனவும் இதை ஒரு வழக்காறாக அரசாங்கம் ஏற்றுப் பின்பற்றும் எனவும் செவெல் கூறினார்.

இந்த உறுதிமொழி பின்னர் ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கமும் ஸ்கொட்லாந்தின் நிர்வாகத் துறையும் செய்து கொண்ட புரிந்துணர்வு மனுவில் (Memorandum of Understanding) சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிவதற்கான 2014ஆம் ஆண்டுக் கருத்துக் கணிப்பு

ஸ்கொட்லாந்து ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரியலாமா வேண்டாமா என்று 2014 செப்ரெம்பர் 18 அன்று பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஸ்கொட்லாந்தின் 32 மன்றங்களுக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பிரியவேண்டாம் என்று 2,001,926 வாக்குகளும் பிரியலாம் என்று 1, 617,989 வாக்குகளும் பதிவாகின. 4,283,392 வாக்காளர்களில் 84.59% மக்கள் தங்கள் வாக்குகளை பதிவுசெய்தார்கள்.

84.59% பதிவான வாக்குகளில் பிரியவேண்டாம் என்று 55.30% மக்களும், பிரியலாம் என்று 44.70% மக்களும் வாக்களித்ததால் ஸ்கொட்லாந்து ஐக்கிய இராச்சியத்திலேயே தொடர்ந்து நீடிக்கும்.

ஸ்கொட்லாந்தின் பெரிய மன்றமான (486,219) கிளாக்சோவில் பிரியவேண்டும் என்று 53.49% மக்கள் வாக்களித்தார்கள், இரண்டாவது பெரிய மன்றமான (378,012) எடின்பர்க்கில் 61.10% மக்கள் பிரியக்கூடாது என்று வாக்களித்தார்கள். ஸ்கொட்லாந்தின் 32 மன்றங்களில் 4 மன்றங்களே பிரிவதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

வாக்கெடுப்பில் தோற்றதால் ஸ்கொட்லாந்தின் முதல் அமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் பதவி விலகினார். எல்லோரும் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்று கேட்டதுடன் நாட்டின் ஐக்கியத்திற்காக வாக்கு சேகரித்த கட்சிகள் ஸ்கொட்லாந்திற்கு பல உரிமைகளை விரைந்து வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் (David Cameron) ஐக்கிய இராச்சியத்தில் பிளவு ஏற்படாதது கண்டு மகிழ்ச்சி தெரிவித்தார் மேலும் விரைவாக ஸ்கொட்லாந்துக்கு அதிக உரிமைகளை வழங்கப்போவதாக கூறினார்.

தோராயமாக 46% மக்கள் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிந்து செல்ல வாக்களித்திருப்பதால் பிரதமர் டேவிட் கமரூன் ஸ்கொட்லாந்து இத்தலைமுறையில் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிந்து செல்லாது எனவும் ஆனால் இது எப்போதும் நிரந்தரம் அல்ல எனவும் கூறினார்.

பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்ட காலம் முதல், ஸ்கொட்லாந்து தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கை மேலெழுவதும் பின்னர் அமுங்கிப்போவது என்பதும் கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல தடவைகளில் நடந்துள்ளது.

2014 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பானது, பிரிந்து போவதற்கு எதிராக அமைந்த நிலையில், 2016 இல் நடைபெற்ற 'பிரிக்ஸிட்' வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்தில் 62 சதவீதமானவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புவதாகவும் 38 சதவீதமானவர்கள் விலக விரும்புவதாகவும் வாக்களித்தனர்.

ஆனால், ஒட்டுமொத்த முடிவுகள் பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கு விரும்புவதைக் கோடுகாட்டிய நிலையில் அதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இந் நிலையில் ஸ்கொட்லாந்து மக்களின் விருப்பத்துக்கு முரணான முறையிலும் ஸ்கொட்டிஸ் நலன்களுக்கு பாதகமானதாகவும் பிரித்தானிய அரசாங்கம் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்ட நிலையில், ஸ்கொட்டிஸ் முதலமைச்சர் நிக்கோலா ஸ்டுர்ஜியோன், பிரிந்து போவதற்கான விருப்பை அறிவதற்கான இரண்டாவது சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான உரிமையைக் கோரினார்.

இந்த எண்ணம் 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற ஸ்கொட்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் வலுவாக வெளிப்பட்டது. ஸ்கொட்லாந்துக்கு சுதந்திரம் வேண்டுமென்ற பிரசாரத் தொனிப்பொருளுடன் களமிறங்கிய தேசியக் கட்சிகள் அமோக வெற்றியீட்டின.

இதனை தொடர்ந்து மக்களின் நேரடிக் கருத்தை அறிய மற்றொரு கருத்துக்கணிப்பை நடத்தலாமே என்று ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் தலைவியும் முதலமைச்சருமான நிக்கோலா ஸ்டர்ஜியோன் தீர்மானித்தார்.

தனியொரு தேசமாக இருந்த ஸ்கொட்லாந்து இங்கிலாந்துடன் சேர்ந்து பெரிய பிரித்தானியாவாக மாறிய சமயம் சில அரசியல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் பிரகாரம், பிரிந்து செல்வது பற்றி ஸ்கொட்லாந்து தனியே தீர்மானிக்க முடியாது.

அதன் அடிப்படையில் தான் ஐக்கிய இராச்சியத்தின் உச்சநீதிமன்றத்தில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரக் கருத்துக்கணிப்பு பற்றி வழக்கு தொடுக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் பிடிக்க...

நாகராசா (வயது-53) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு அராலி மத்தி கடற்கரையில் இருந்து தொழிலுக்குச் சென்ற இவர் நேற்றுக் காலை வீடு திரும்பாததைத் தொடர்ந்து சக தொழிலாளர்களும் உறவினர்களும் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது பொன்னொளி நகர் பொன்னாலைக் கடற்கரையோரமாக, இராவணேஸ்வரத்திற்கு சமீபமாக வள்ளம் கரையொதுங்கிருந்ததைக் கண்டனர். குறித்த கடற்றொழிலாளி வள்ளத்தினுள் சடலமாகக் காணப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணை மேற்கொண்டதை அடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ம-7,33)

## தனியார்...

இதில் சாரதியான வினாசித்தம்பி ஜெகதீஸ்வரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுமார் 05 நாட்களுக்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்தில் சில யுவதிகளை அசௌகரியப்படுத்தும் வகையில் 04 இளைஞர்கள் கிண்டல் செய்து கொண்டிருந்தனர். அப்போது மேற்படி காயமடைந்த நபர், சம்பந்தப்பட்ட இளைஞர்களுக்கு அறிவித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி குறித்த இளைஞர்கள் சாரதியை காயப்படுத்தியுள்ளதாக காயமடைந்தவரின் உறவினர்கள் சந்தேகம் வெளியிடுவதுடன் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## இலங்கையின்...

பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அநுர குமார திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி ஏக்கநாயக்க மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## பாத்திரத்துக்குள்...

குழந்தை மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## தீர்மானங்களை...

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமக்கான ஆட்சியாளர் ஒருவரைத் தெரிவு செய்வதோடு, ஜனநாயகக் கடமை நின்றுவிடாது.

அது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம் என்ற போதிலும், நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்த முதலில் சட்டம் மற்றும் ஒழுங்கு வலுப்படுத்தப்பட வேண்டும்.

எனது பதவிக் காலத்தில் அதிக பட்ச அர்ப்பணிப்புடன் கடமையாற்றுவதற்குத் தயாராக உள்ளேன்.

தேர்தலின் ஊடாக இடம்பெறும் ஆட்சி மாற்றத்தைக் கடந்த ஆட்சியாளர்கள் இதுவரை எதிர்க்கவில்லை.

அந்தவகையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மக்களாணைக்கு மதிப்பளித்துள்ளார்.

நாட்டின் அரசியலை மேலும் தூய்மைப்படுத்துவதற்கும், மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் பாடுபடத் தயாராகவுள்ளோம்.

மக்களின் கௌரவம் மற்றும் நம்பிக்கையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அரசியல் மீதும் அரசியல்வாதிகள் மீதும் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப எம்மால் இயலுமான அனைத்தையும் செய்வதற்குத் தயாராக உள்ளோம்.

தற்போதைய நெருக்கடியை, அரசாங்கத்தினாலோ ஒரு கட்சியினாலோ, ஒரு நபராலோ தனியாக எதிர்கொள்ள முடியாது. என்னால் மாயாஜாலங்களைச் செய்யமுடியாது.

நான் இந்த நாட்டில் பிறந்த சாதாரண பிரஜை.

என்னிடம், இயலுமைகளும் உண்டு இயலாமைகளும் உண்டு.

இயலுமைகளை ஒன்றிணைத்து, தெரிந்தவற்றைச் சேர்த்துக் கொண்டு மிகச் சிறந்த தீர்மானங்களை எடுத்து, நாட்டை வழிநடத்துவதே எனது முதன்மையான நோக்கமாகும்.

எனவே, அந்தப் பணிகளில் ஒரு பங்குதாரராக இருப்பதே எனது பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பினை நிறைவேற்றப் பொதுமக்களினதும் ஏனைய துறையினரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

தற்போதைய சவாலை எதிர்கொள்வதற்கு, எனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளைச் சரிவர நான் நிறைவேற்றுவேன்.

அதேநேரம், இலங்கைக்குச் சர்வதேச ஆதரவுகள் அவசியமாகும்.

எனவே, உலகில் பல்வேறு அதிகாரப் போட்டிகள் இருப்பினும் ஒவ்வொரு நாடுகளுடனும் இலங்கைக்கு அனுகூலமான வகையில் பொதுக் கொள்கையுடன் நாம் செயற்பட எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டை மீட்டெடுப்பதில், கைத்தொழிலாளர்களுக்கும், தொழில்முனைவோருக்கும் பாரிய பங்கு உள்ளது.

என்னைஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வாக்களித்தவர்களுக்கும், என்மீது நம்பிக்கை வைக்காதவர்களுக்கும், எந்தவிதப் பாகுபாடுமின்றி, கடமையாற்றத் தயாராகவுள்ளேன்.

எதிர் வரும் காலங்களில் அதன் செயல் வடிவத்தினைக் கண்டு கொள்ள முடியும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## 4 பேர்...

நியமிக்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உரையாற்றும்போதே ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நியமனங்கள் இன்று (நேற்று) நடைபெறாது எனத் தெரிவித்த அமரசூரிய, பிரதமர் நியமனம் எதிர்காலத்திலும் நடக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும், யார் பிரதமர் என்பது குறித்து கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

நாடு நெருக்கடியான நிலையில் உள்ள வேளையில் தமது கட்சிக்கு ஆணை கிடைத்துள்ளதாகவும் அதனை நிறைவேற்றுவதற்கான பணிகளை இன்று முதல் ஆரம்பிக்க வேண்டும் எனவும் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 5604
U 0 4 9 4 1 0
அத சம்பத
U 9 4 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 179
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1634
F 01 09 28 60 F
37323

மெகா பவர்
திகதி 23/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1952
S 12 34 57 66 73
79687

லக்கி 7 VIP
திகதி 2024.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 0430
O 6 4 2 9 7 7 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3846
சீட்டிழுப்பு திகதி 23.09.2024
C 39 42 51 56
C 39851
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 913
தனுசு 06 20 25 36 தனுசு
65402 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.09.2024 வெற்றி வாரம் 312 வர்ணம் ஊதா
T 6 5 9 4 1 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,484,856.00
36259
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2578 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 23.09.2024 தினம் திங்கள்
35 40 41 68 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,088,860.80

சனிதா
திகதி 2024.09.23 வெற்றி வாரம் 4739
24 51 56 69 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,763,504.00
22094

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4290 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.23 தினம் திங்கட்கிழமை
06 33 37 51 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,924,290.00
166130

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 22 60 62 67 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 546,347,191.00
1754 பச்சை 23.09.2024 திங்கள்

ஜயோதா Jayoda
திகதி 2024.09.23 வெற்றி வாரம் 2062 வர்ணம் செம்மஞ்சள்
05 12 13 63 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,464,008.80

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2404
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,847,290.40
ADA KOTIPATHI
05 14 43 53 I
792757


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (1908)

075 033 6759

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (369)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் (371)

Over 11 Kg

UK - 1350/=, Germany - 2350/=, France - 2300/=, Canada - 2500/=

Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.

070 375 0001


# மூவரிற்கே கட்டுப்பணம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மூவரைத் தவிர ஏனைய 36 பேரும் கட்டுப் பணத்தை இழந்துள்ளதாக தேர்தல் ஆணைக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அநுரகுமார, சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே கட்டுப்பணத்தை பெறத்தகுதியுள்ளனர்.

குறிப்பாக நாமல் ராஜபக்ஷ,அரியநேத்திரன், முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா உள்ளிட்டவர்களும் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர்.(மு-7)


## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1244)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1244)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1245)

076 825 7716 (ஆகாஸ்)

## முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

எமது பாசமிகு பெற்றோர் உரிய பராமரிப்பின்றி அவதிப்படுகிறார்களா...

நீங்களும் நாடலாம்...
- சகல வசதிகளுடனும் கூடிய தனியறை வசதிகள்
- அன்பான உறவுகளின் பராமரிப்பு
- ஆரோக்கியமான சைவ, அசைவ உணவுகள்
- வைத்திய சேவைகள்
- 24 மணிநேர தாதியர் கண்காணிப்பு
- எந்நேரமும் உறவுகளுடன் உரையாடும் வசதி
- விரும்பிய நேரம் வெளியில் சென்றுவருதல்
- நடைப்பயிற்சி மற்றும் பொழுதுபோக்குகள்
- அமைதியான ஆன்மீகச் சூழல்



மேலும் பல வசதிகளுடன் வீட்டில் இருப்பது போன்ற இயல்பான வாழ்வினைப்பெற விரும்புவர்களுக்கு.

(2109) "முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்"

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை K.K.S வீதி, தெல்லிப்பளை.
(தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக)

077 0709617
077 2380196

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு 7 குழியில் இடைக்கால வீட்டுடன் அமைந்த காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (2107)

077 710 9638, 075 710 9639


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 07.10.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சதாசிவம் சிவானந்தம்

அவர்களின் 1ம் ஆண்டு நினைவுக் கிரியைகள் 25.09.2024 நாளை புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து உடுப்பிட்டி கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திர கோவிலடி,
உடுப்பிட்டி. (368)

தகவல்:
குடும்பத்தினர்
077 547 2933

# மரண அறிவித்தல்



பிறப்பு 24.10.1939 | இறப்பு 22.09.2024

## குமாரசாமி புஸ்பதேவி

மூளாய் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மூளாய் டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி புஸ்பதேவி அவர்கள் 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும் குமாரசாமி அவர்களின் பாசமிகு மனைவியும் சிவசுப்பிரமணியம்(கனடா), சிவாஜினி (ஆசிரியை - வட்டு. மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் பவானி (கனடா), பத்மராஜா(காணி மாவட்ட அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரதி சிவசங்கர்(கனடா), ஆரணி பகிதரன் (கனடா), விதுஷன், கஜலக்ஷன், ஸைந்தவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 24.09.2024 இன்று செவ்வாய்க் கிழமை அரசடி வீதி, வட்டுக்கோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி,
வட்டுக்கோட்டை. (370)

077 821 9742

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.